2019 ஜனவரி 8] [திரு. மு.க. ஸ்டாலின்]

எங்களுக்குத் தெரிந்திருக்கக்கூடிய இந்தச் செய்தி இந்த அரசுக்கு இன்னும் தெரியவில்லை என்று நினைக்கிறபோது உள்ளபடியே வேதனைக்குரிய வகையில் அமைந்திருக்கிறது. எனவே, இதைக் கண்டிக்கக்கூடிய வகையிலே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: நாங்கள் பதில் சொல்கிறோம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முதலிலே அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அப்போது இல்லை. அவையில் வந்தவுடனே சொன்னார்கள். இருப்பினும், முழுமையாக அந்தத் தீர்ப்பினுடைய விவரம் கிடைக்கவில்லை. அந்த விவரம் கிடைத்ததற்குப் பின்னால் அதற்குப் பதில் சொல்கின்றோம். அப்படி ஒரு தீர்ப்பு வந்திருந்தாலுங்கூட, மீண்டும் சீராய்வு மனுவாவது போட்டு, எந்தச் சூழ்நிலையிலும் அந்த ஆலையைத் திறக்காமல் இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் உங்களுடைய கருத்துதான் எங்கள் அரசினுடைய கருத்தும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கும், அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) எழும்பூர் தொகுதி, திடீர் நகர் மற்றும் பி.கே. காலனி பகுதிகளில் குடிசைகளுக்கு மாற்றாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. கே.எஸ். இரவிச்சந்திரனுக்குப் பதில் சொல்கிறார்.

முற்பகல் 11—25

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 4,546 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 13 திட்டப் பகுதிகளில் கட்டப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன. மாறுபட்ட தட்பவெப்ப நிலை,

சுற்றுச்சூழல் மற்றும் இதர காரணங்களால் மிகவும் சிதிலமடைந்த குடியிருப்புகள் மக்களின் உடைமைக்கும் உயிருக்கும் ஆபத்தினை ஏற்படுத்துகின்ற சூழ்நிலை ஏற்பட்டால், இதுபோன்ற சிதிலமடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகளை ஆய்வு செய்து, ஆய்வின் அடிப்படையில் குடியிருப்புகளை மறுகட்டுமானம் செய்ய அல்லது வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ள பரிந்துரை செய்ய அரசால் தொழில்நுட்பக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

சென்னை, எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில், வார்டு எண் 77 பி.கே. காலனி, வார்டு எண் 104 ஆர்.கே. புரம், வார்டு எண் 104 பங்கஜம் தெரு, வார்டு எண் 104 ஓசான்குளம், வார்டு எண் 107 எம்.எஸ். நகர், வார்டு எண் 107 வேம்புலியம்மன் தெரு, இப்போது, அதோடு சேர்த்து ஏழாவதாக 61–வது வட்டத்தையும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள் சேர்த்திருக்கின்றார். மேலே குறிப்பிட்ட திட்டப் பகுதிகளில் உள்ள சிதிலமடைந்த குடியிருப்புகளை இடித்து மீண்டும் கட்டுமானம் செய்யும் திட்டப் பகுதிகளினுடைய தற்போதைய நிலையைச் சொல்கிறேன். சென்னை, பி.கே. காலனி திட்டப் பகுதியில் 594 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 1975 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு குடிசைப் பகுதிவாழ் மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இக்குடியிருப்புகளை வாரிய தொழில்நுட்பக் குழு ஆய்வு செய்து, இக்குடியிருப்புகளை இடித்துவிட்டு மறுகட்டுமானம் செய்ய பரிந்துரை செய்துள்ளது. இப்பகுதியில் 600 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.84 கோடி செலவில், Stilt + 5 மேம்பாட்டில் கட்ட வரைபடம் இறுதி செய்யப்பட்டிருக்கிறது; மதிப்பீடுகளும் தயார் செய்யப்பட்டுவிட்டன. இத்திட்டப் பணிகளை 'அனைவருக்கும் வீட்டு வசதி' திட்டத்தின்கீழ் நிறைவேற்ற, மைய மற்றும் மாநில அரசுகளின் ஒப்புதல் பெற்று பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, ஆர்.கே. புரம், சென்னை. ஆர்.கே. புரம் திட்டப் பகுதியில் 168 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 1973 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு, குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இக்குடியிருப்புகளை வாரிய தொழில்நுட்பக் குழு ஆய்வு செய்து, இக்குடியிருப்புகளை இடித்துவிட்டு புதிய

2019 ஜனவரி 8] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

குடியிருப்புகள் கட்ட பரிந்துரை செய்துள்ளது. இப்பகுதியில் 168 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.24.50 கோடி செலவில் Stilt+*7 மேம்பாட்டில் கட்ட வரைபடம் இறுதி செய்யப்பட்டிருக்கிறது; மதிப்பீடுகளும் தயார் செய்யப்பட்டிருக்கின்றன. இத்திட்டப் பணிகளையும் 'அனைவருக்கும் வீட்டு வசதி' திட்டத்தின்கீழ் நிறைவேற்ற மைய மற்றும் மாநில அரசுகளுடைய ஒப்புதல் பெறுகின்ற நிலை இருக்கிறது. விரைவில் இந்தப் பணியும் தொடங்கப்படும்.*

அடுத்து, எம்.எஸ். நகர், சென்னை. எம்.எஸ். நகர் திட்டப் பகுதியில் 224 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 1971–1973 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு, குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு குடியிருப்புகள் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இக்குடியிருப்புகளை வாரிய தொழில்நுட்பக் குழு ஆய்வு செய்து, இக்குடியிருப்புகளுக்கு உரிய பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்ளுமாறு பரிந்துரை செய்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கவும்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *இத்திட்டப் பகுதி குடியிருப்புகளுக்கு 2012 முதல் 2018 வரை ரூ.22.86 இலட்சம் செலவில் பழுதுபார்ப்புப் பணிகளும், 2016–2017 ஆம் ஆண்டில் ரூ.6.54 இலட்சம் செலவில் சுவர்களுக்கு வர்ணம் பூசும் பணியும் மேற்கொள்ளப்பட்டன. இக்குடியிருப்புகளுக்கு கூடுதலாக ரூ.1.50 இலட்சம் செலவில் பழுதுபார்ப்புப் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அடுத்ததாக, ஓசான்குளம், சென்னை. ஓசான்குளம் திட்டப் பகுதியில் 288 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 1976–1977 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு, குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, குடியிருப்புகள் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இக்குடியிருப்புகளை வாரிய தொழில்நுட்பக் குழு விரைவில் ஆய்வு செய்ய உள்ளது. இக்குழுவின் ஆய்விற்குப் பின்னர் அதன் பரிந்துரையின் அடிப்படையில் அடுக்குமாடிக் குடியிருப்புகளை இடித்து, மீண்டும் கட்டுதல் அல்லது பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்வது குறித்து உரிய நடவடிக்கைகள் கூடிய விரைவில் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [*2019 ஜனவரி 8*

பங்கஜம் தெரு, சென்னை. பங்கஜம் தெரு திட்டப் பகுதியில் 56 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 1974 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு குடியிருப்புகள் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இக்குடியிருப்புகளையும் வாரிய தொழில்நுட்பக் குழு ஆய்வு செய்ய உள்ளது. இக்குழுவின் ஆய்விற்குப் பின்னர், அதன் பரிந்துரையின் அடிப்படையில் அடுக்குமாடிக் குடியிருப்புகளை இடித்து, மீண்டும் கட்டுதல் அல்லது பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்வது குறித்து உரிய நடவடிக்கைகள் கூடிய விரைவில் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேம்புலியம்மன் திட்டப் பகுதி, சென்னை. வேம்புலியம்மன் திட்டப் பகுதியில் 144 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 1976 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு, குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு குடியிருப்புகள் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இக்குடியிருப்புகளையும் வாரிய தொழில்நுட்பக் குழு ஆய்வு செய்ய உள்ளது. இக்குழுவின் ஆய்விற்குப் பின்னர் அதன் பரிந்துரையின் அடிப்படையில் அடுக்குமாடிக் குடியிருப்புகளை இடித்து, மீண்டும் கட்டுதல் அல்லது பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்வது குறித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–30

சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், உலக வங்கியினுடைய நிதி உதவியை கூடிய விரைவில் பெறக்கூடிய ஒரு நல்ல ஆரோக்கியமான சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, சென்னை மெட்ரோபாலிட்டன் சிட்டி முழுமைக்கும் இருக்கின்ற குடிசைப் பகுதிகளை அகற்றிவிட்டு, அந்தந்தப் பகுதிகளிலேயே மறுகட்டுமானம் செய்வதற்கான கருத்துரு அரசினுடைய ஆய்வில், தீவிர பரிசீலனையில் இருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல், எங்கெல்லாம் குடிசைப் பகுதிகள் இருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் அகற்றிவிட்டு, குடிசைப் பகுதிகளற்ற சென்னை மாநகரத்தை உருவாக்குவதே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் முதல் நோக்கமாகும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.